# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:39** **தேதி:-13.05.2015**

**JAC கூட்ட முடிவுகள்**

அன்பார்ந்த தோழர்களே,

12.05.2015 அன்று புதுடெல்லியில் நமது அகில இந்திய JAC கூட்டம் தலைவர் தோழர் சந்தேஸ்வர் சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. JAC அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு அனைவரையும் வரவேற்றதுடன், கடந்த கூட்டத்திற்கு பின் நடைபெற்ற விஷயங்கள் தொடர்பாக விவரித்தார். அதற்கு பின் நடைபெற்ற விவாதங்களுக்கு பின் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1) ஊழியர்களின் 30 அம்ச கோரிக்கைகள் மீது நிர்வாகம் மற்றும் JACக்கும் இடையே RLC பேச்சு வார்த்தைகளை நடத்தியது. ஊதிய தேக்கம் தொடர்பாக, JAC உடன் நிர்வாகம் பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என 06.05.2015 அன்று நடைபெற்ற கூட்டத்தில் RLC வழிகாட்டியுள்ளார். நிர்வாகமும் அதனை ஏற்றுக் கொண்டது. ஊழியர்களின் தேங்கியுள்ள பிரச்சனைகள் மீது CMD BSNLஉம் தலையிட வேண்டும் என அவரை தாம் கேட்டுக் கொண்டதாகவும் அமைப்பாளர் தெரிவித்தார். JAC தலைவர்களை சந்திக்க BSNL CMD ஏற்றுக் கொண்டார். இந்த மாதத்தில் அந்தக் கூட்டம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2) PLI கமிட்டி கூட்டங்களில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை கூட்டம் பாராட்டியது. லாபத்தின் அடிப்படையில் இல்லாமல் உற்பத்தித் திறன் அடிப்படையில் PLI கணக்கிடப்பட வேண்டும் என்கிற JAC யின் வேண்டுகோளை நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது. அதே போல PERFORMANCE SYSTEM MANAGEMENT (PMS) அடிப்படையில் PLI கணக்கிடக்கூடாது என்கிற கோரிக்கையும் ஏற்றுக் கொண்டுள்ளது. இன்னும் பல முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளது. அனைத்தையும் பரிசீலித்த பின், குறைந்த பட்ச PLIஐ உறுதி செய்யும் வகையில் புதிய PLI பார்முலாவை விரைவில் இறுதி செய்ய PLI கமிட்டியில் உள்ள ஊழியர் தரப்பு பிரதிநிதிகள் செயல்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

3) கேடர்களின் பெயர் மாற்றம் தொடர்பாக விவாதிக்கையில், NE 10 மற்றும் அதற்கு உயர்ந்த ஊதிய விகிதங்களில் உள்ள Sr.TOAக்களுக்கு 'SUPERINTENDENT' என்கிற பெயரையும், NE-9 ஊதிய விகிதம் வரை உள்ள Sr.TOAக்களுக்கு பொருத்தமான பெயரை இறுதி செய்யப்பட வேண்டும் என்றும், TTAக்களின் பெயரை JUNIOR ENGINEER என மாற்ற வேண்டும் என்றும் அந்தக் கூட்டம் முடிவு செய்துள்ளது.

4) 01.01.2017 முதல் நடைபெற வேண்டிய அடுத்த ஊதிய மாற்றத்திற்கான நடவடிக்கைகளை நிர்வாகம் துவங்க வேண்டும் என JAC வற்புறுத்த வேண்டும் என இந்தக் கூட்டம் முடிவு செய்துள்ளது.

5) 17.04.2015 அன்று நடைபெற்ற கூட்டத்தில் BSNL CMD, FORUM தலைவர்களுடன் உறுதி அளித்த படி டிலாய்ட்டி கமிட்டி பரிந்துரைகள் மீது நிர்வாகம் ஊழியர் தரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றும் அந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**